விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 242 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 02 வியாழக்கிழமை (18.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கலயாண மாலை

சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## நெருக்கடியில் இலங்கைக்கு இந்தியா மட்டுமே உதவியது

# இந்திய பெருங்கடலின் உரிமையை கோரமுடியாது

### சீனக்கப்பல் தொடர்பில் ஜெய்சங்கர்



(கொழும்பு)

இந்தியப் பெருங்கடலின் ஏகபோக உரிமையை யாரும் கோரமுடியாது என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மேலும் நெருக்கடியின் போது இலங்கைக்கு இந்தியா மட்டுமே உதவி செய்ததாக சுட்டிக்காட்டியுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட அனுமதி வழங்கப்பட்ட சீனாவின் போலிஸ்டிக் ஏவுகணை மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பு கப்பல் யுவான் வாங் 5 பற்றிய கேள்வி ஒன்றுக்கே அவர் இந்த

11

## 1050 ரூபாயால்

# லாஃப் எரிவாயு விலை குறைப்பு

(கொழும்பு)

லாஃப் உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 12.5 கிலோகிராம் எடையுள்ள லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 1050 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 5,800 ரூபாவாகும்.

11

# பஸிலை சந்திக்கிறார் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவிற்கும் இடையில் இன்று முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அக் கலந்துரையாடலில் பெரமுனவை சேர்ந்த 7 சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆட்சி அமைப்பது தொடர்பாகவும் ஆழமான

11

# ரணில் எவ்வாறு நாட்டின் தலைவராக முடியும்?

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

(கொழும்பு)

கொழும்பில் தோற்கடிக்கப்பட்டு வீட்டுக்குச் சென்ற ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு நாட்டின் தலைவராக முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

ரணில் விக்கிரமசிங்க ஒரு கயவர் என சிலர் கூறுவதாகக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், கொழும்பு மாவட்டத்தில் தோற்று வீட்டுக்குச் சென்று ஜனாதிபதியானதால் அவ்வாறு கூறுவதாக தெரிவித்

11

## அம்பாந்தோட்டை துறைமுகத்தை

# இராணுவ நோக்கங்களுக்காக சீனா பயன்படுத்தமுடியாது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

அம்பாந்தோட்டையின் தெற்கு துறைமுகத்தை இராணுவ நோக்கங்களுக்காக சீனா பயன்படுத்த அனுமதிக்கப்படாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யோமியுரி ஷிம்பன் எனும் ஜப்பானிய பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

11

## சீனாவின் கப்பல் விவகாரத்தில்

# கடும் அழுத்தம் மூலமே இலங்கையின் தீர்மானத்தை சீனா மாற்றியது

### இந்திய பத்திரிகைகள் செய்தி

(கொழும்பு)

அதிநவீன தொழில்நுட்ப கப்பல் தொடர்பில் இலங்கை எடுத்த தீர்மானத்தை, கடுழ் அழுத்தங்களைக் கொடுத்து சீனா மாற்றியுள்ளதாக இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம் சீனா இலங்கைக்கு அதிக அழுத்தங்களை கொடுத்ததாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது கப்பலின் கடல்சார் ஆராய்ச்சி நடவடிக்கைகள் சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச அளவில்

11

# இந்தியா செல்ல முயன்ற 10 பேர் மன்னாரில் கைது

### கிளி, மன்னாரைச் சேர்ந்தவர்கள்

(மன்னார்)

சட்டவிரோதமாக இந்தியா செல்ல முயன்ற 10 பேர் தலைமன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

படகொன்றில் சென்ற போது நேற்று அதிகாலை கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

4 ஆண்களும் 4 சிறார்களும் 2 பெண்களுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார், கிளிநொச்சி, திருகோணமலை

11

# அடிமைத்தனத்தை ஒழிக்க இலங்கை தவறியுள்ளது

### ஐ.நா ஆழ்ந்த கவலை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்ட அறிக்கையொன்று, இலங்கை அடிமைத்தனத்தை ஒழிக்கத் தவறியுள்ளதாகக் கண்டறிந்துள்ளது.

சர்வதேச சட்டம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய ஜப்பானிய அறிஞரும் ஐ.நா வின் விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபோகாட்டா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் குறிப்பி

11

# கொரோனா +5 மரணம் +161 தொற்று

(கொழும்பு)

கோவிட்-19 தொற்றுக்குள்ளான மேலும் ஐவர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று பிற்பகல் உறுதிப்படுத்தியுள்ளார்.

11

## இலங்கையில் தற்போது

# மில்லியன் கணக்கான மக்கள் வறுமையில்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நெருக்கடி மில்லியன் கணக்கான மக்களை வறுமையில் தள்ளியுள்ளது.

அத்துடன் சுகாதாரம், கல்வி மற்றும் போதுமான வாழ்க்கைத் தரத்திற்கான அவர்களின் உரிமைகளை பாதிக்கிறது என்று மனித உரிமை

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன கப்பல் விவகாரத்தை பெரிதுபடுத்தக் கூடாது

## சுப்பிரமணியன் சுவாமி



(கொழும்பு)

சீன கப்பல் விவகாரத்தை பெரிதுபடுத்தக்கூடாது என சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாங்கள் இரண்டு விடயங்களை செய்ய பழகவேண்டும். ஒன்று இலங்கைக்கு இந்தியாவுடன் எந்த பாதுகாப்பு - இராணுவ கூட்டணியும் இல்லை, மற்றொன்று நாங்கள் இலங்கையுடன் இருக்கின்றோமா இல்லையா என்பது குறித்து நாங்கள் தெளிவாகவில்லை.

முன்னர் யுபிஏ அரசாங்கத்தின்போது விடுதலைப் புலிகள் காரணமாக திராவிட முன்னேற்ற கழகம் முக்கிய பிரச்சினையாக காணப்பட்டது.

விடுதலைப் புலிகள் இந்திய எதிர்ப்பாளர்களாக காணப்பட்ட போதிலும் திமுகவினர் அவர்கள் எங்கள் தமிழ் சகோதரர்கள் எனத் தெரிவித்தனர்.

இந்த விடயத்தை பெரிதுபடுத்தக்கூடாது என நான் தெரிவிக்க விரும்புகின்றேன்" என சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# யாழில் 17 வயது இரு சிறுமிகள் வாகனத்தில் கடத்தப்பட்டு வன்புணர்வு

## ஐவர் கைதாகி விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 17 வயது சிறுமிகள் இருவரை கடத்திச் சென்றமை மற்றும் தகாத உறவு கொண்டமை என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் பேருந்து சாரதிகள் இருவர், நடத்துநர்கள் இருவர் உட்பட ஐவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன், வீட்டைவிட்டு வெளியேறி துர்நடத்தையில் ஈடுபட்ட சிறுமிகள் இருவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் கட்டளையிட்டது.

இந்த கைது நடவடிக்கை நேற்று இடம்பெற்ற நிலையில் சிறுமிகள் இருவரும் குற்றஞ்சாட்டப்பட்ட ஐவரும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவுகள் வழங்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டதாவது,

இரண்டு வாரங்களுக்கு முன்னர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 17 வயதுச் சிறுமிகள் இருவர் வீட்டிலிருந்து வெளியேறி வந்து யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் இருந்துள்ளனர்.

அவர்கள் தொடர்பில் அறிந்த ஆண் ஒருவர், சிறுமிகள் இருவரையும் அழைத்துச் சென்று சாவகச்சேரியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்துள்ளார்.

எனினும் இரு நாட்களுக்கு முன் அந்த விடுதியிலிருந்து வெளியேறிய மூவரும் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு வந்துள்ளனர்.

அன்றைய தினம் இரவு சிறுமிகள் இருவரையும் வாகனம் ஒன்றில் பேருந்து சாரதிகள் இருவர், நடத்துநர்கள் இருவர் என மேலும் நால்வர் இணைந்து வாகனம் ஒன்றில் எழுதுமட்டுவாழ் பற்றைக்காட்டுக்குள் அழைத்துச் சென்றுள்ளனர்.

அதன்போது சிறுமி ஒருவர் சாதூரியமாகப் பேசி வாகனத்திலிருந்து இறங்கி எழுதுமட்டுவாழில் மக்கள் வாழும் பகுதிக்கு வந்துள்ளார்.

வீதியில் சென்றவர்களிடம் நடந்தவற்றை தப்பிவந்த சிறுமி தெரிவித்த நிலையில் பொலிஸ் அவசர பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது.

மற்றைய சிறுமியுடன் சென்ற ஐவரும் மறுநாள் யாழ்ப்பாணம் நகருக்கு அழைத்து வந்து சிறுமியை இறக்கி விட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

சிறுமிகளிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்களை கடத்திச் சென்றமை மற்றும் தகாத உறவுகொண்டமை என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் ஐவர் கைது செய்யப்பட்டனர்.

வீட்டைவிட்டு வெளியேறி வந்து துர்நடத்தையில் ஈடுபட்டமையினால் சிறுமிகளும் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். (ம-7,1,04)

# நாட்டின் தற்போதைய நிலை தொடர்பில் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கம்

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடருக்கு முன்னதாக நாட்டின்தற்போதையநிலைமை தொடர்பில் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி விளக்கமளித்துள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது வெளிவிவகார அமைச்சர் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

மனித உரிமைகள், நீதி மற்றும் சமத்துவம் தொடர்பிலான விடயங்களில் மேலும் முன்னேற்றமடையும் வகையில், ஒருமித்த கருத்தை உருவாக்கும் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் மனித உரிமைகள் பேரவையுடனான ஆக்கபூர்வமான செயற்பாட்டை இலங்கை தொடர்ந்து முன்னெடுக்கும் எனவும் அலிசப்ரிவலியுறுத்தியுள்ளார். (ம-7)

# பெரமுனவின் பதாகைகளில் கோட்டாவின் படம் நீக்கம்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பதாகைகளில் இருந்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உருவப்படம் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை முதல் ஊடகவியலாளர் ஊடக சந்திப்புகளில் அவரது புகைப்படத்தை பயன்படுத்தவில்லை என தெரியவந்துள்ளது.

முன்னதாக, மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் முகங்கள் பொதுஜன பெரமுனவின் டிஜிட்டல் திரையில் காண்பிக்கப்பட்டது.

இருப்பினும் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் இதனை இன்னும் உறுதிப்படுத்தவில்லை. (ம-7)

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
27 - 11 - 1944

இறப்பு
29 - 08 - 2021

அமரர்
சபாரத்தினம் செல்வரத்தினம்
{(Retired) Walker & Sons Company Mutwal, Colombo}
திதி: தேய்பிறை சப்தமி
18.08.2022

அன்பின் திருவுருவே!
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டு ஒன்றல்ல ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடைபெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள் என்றென்றும்
நம்மைவிட்டு நீங்காது

சூராவத்தை,
சுன்னாகம்.
குடும்பத்தினர்
(12472)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தில் 14.08.2022
அன்று **கலைமாணி** (B.A தமிழ்)
பட்டத்தினைப் பெற்றுக் கொண்ட
எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி வினோபா
தயாளன்
( B.A, Trd.Tamil )
அவர்களை, பாராட்டி வாழ்த்துவதுடன்,
மேலும் அவர் பல பட்டங்களைப்
பெறுவதற்கும் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்,
கிளி/ மாசார் அ.த.க. பாடசாலை
Best Wishes!
(12474)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழிற்கு தேவையான முதற்கட்ட யூரியா உரங்கள் வந்தடைந்தன

(சாவகச்சேரி)

**யாழ். மாவட்டத்தில் 2022/23 ஆம் ஆண்டு காலபோக நெற் செய்கைக்கான முதற்கட்ட யூரியா உரங்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன.**



இவ்வாறு 4 கொள்கலன்களில் வந்த 200தொன் யூரியா உரத்தினை பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் கையேற்று கோண்டாவில் உரக்களஞ்சியத்தில் வைத்து கமநல சேவை நிலைய அதிகாரிகளிடம் கையளித்தார்.

இம்முறை யாழில் காலபோக நெற்செய்கைக்கு 1300 தொன் யூரியா தேவைப்பாடாக உள்ள நிலையில் மிகுதி உரங்கள் விரைவில் கமநலசேவை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தொலைபேசி வாயிலாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவை தொடர்பு கொண்டு யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மரக்கறி செய்கைக்கான உரங்களையும் விரைவில் பெற்றுத் தருமாறும் கோரிக்கை விடுத்தார். (4-30)

# யாழ்.பாடி - 07 மலருக்கு ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளி யிடப்படவுள்ள யாழ். பாடி - 07 பிரதேச மலரானது ஆக்க இல க்கிய சிறப்பு மலராக வெளி வரவுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் வதிவிடத்தினைக்கொண்டவர்களிடமிருந்து இம்மலருக்கு கவிதை, சிறுகதை, நூல் விமர்சனம், சிறுவர் இலக்கியம், நாட்டாரியல் ,மருத்துவம், வணிகம் , உளவியல், ஆய்வு (இலக்கியம், தொல்லியல், ஆன்மிகம், வரலாறு) சூழலியல், சமூகவியல், கிராமிய கலைகள்,கலை மரபும் பண்பாடும்,அறிவியல் போன்ற தலைப்புகளில் ஆக்கங்கள் யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவில் இருந்து எதிர் பார்க்கப்படுகின்றன.

பிரதேசம் சார்ந்த தொன்மைகளை அடையாளங்கண்டு பண்பாட்டு விழுமியங்களை வெளிக்கொணரும் ஆக்கங்களாக அமைய வேண்டும். ஆக்கங்கள் யாவும் A4 தாளில் கையெழுத்துப் பிரதியாகவோ அல்லது கணனியில் தட்டச்சு பதிப்பாகவோ சமர்ப்பிக்க முடியும்.

சுய படைப்பாக அமைவதுடன் ஏற்கனவே வெளிவந்தவையாக அமைதல் ஆகாது. மலர்க்குழுவின் தீர்மானத்துக்கமைய தரமான ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கடிதவுறையின் இடது பக்க மூலையில் "யாழ்.பாடி -07 பிரதேச மலர்" எனக்குறிப்பிட வேண்டும்.

ஆக்கங்களுடன் முழுப் பெயர் , முகவரி, தொலைபேசி இலக்கத்துடன் பிரதேச செயலாளர்,பிரதேச செயலகம்,யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு 15.09.2022 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளரும் கலாசாரப்பேரவையின் தலைவருமான எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார். (4)

# வவுனியாவில் பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பம்

(குருமன்காடு)

வவுனியாவில் கொவிட் தொற்று ஏற்பட்டு வருவ தனால் பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொவிட் தொற்று தீவிர நிலையை அடையாது தடுக்கும் நடவடிக்கையாக பைசர் கொவிட் தடுப்பூசிகள் மீள ஏற்றப் படவுள்ளன.

இதுவரை தடுப்பூசிகள் முறையாக போடாதவர்கள் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

அந்தவகையில், வவு னியா பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை தடுப்பூசிகளைப் பெற முடியும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளதுடன் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறும் அவர்கள் கோரியுள்ளனர். (4-250)

## நுணாவில் ஐ.ஓ.சி.யின் சேவை நேரம் நீடிப்பு

சாவகச்சேரி நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தின் சேவை நேரம் நேற்று புதன்கிழமை தொடக்கம் நீடிக்கப்பட்டிருப்பதாக உரிமையாளர் வை.சிவராசா தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் காலை 6 மணி தொடக் கம் இரவு 10 மணி வரை கியூ.ஆர் முறைமை அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கப்படும் என மேலும் அவர் தெரிவித்தார். (4-18-30)



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய நிறைவு ஆடிச் செவ்வாய் உற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது துர்க்கை அம்பாள் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பரத்தில் வெளிவீதி உலா வந்து அருள்பாலித்தாள். (படம்- ரவிசாந்)


# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பின்வரும் இடங்களில் காணப்படும் பாவனையில் இல்லாத அலுவலக தளபாடங்கள், கணனி உபகரணப்பொருட்கள் மற்றும் பாவிக்கமுடியாத/பாவனைக்குத் தேவைப்படாத பொருட்களை பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலவிற்பனைக்குரிய பொருட்கள் தொடர்பான விபரங்களை பல்கலைக்கழக பொது நிர்வாகக் கிளையுடன் தொடர்புகொண்டு பின்வரும் தினங்களில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 02.00 மணிவரை குறித்த நாட்களில் பார்வையிடலாம்.

ஏலவிற்பனை நடைபெறும் இடங்கள்.

| இல | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஏலப்பொருட்கள் | ஏலப்பொருட்களை பார்வையிடும் நாட்கள் | ஏலவிற்பனை நடைபெறும் திகதி / காலம் |
|---|---|---|---|---|
| 01 | மருத்துவபீடம் | • கணனி உபகரணப் பொருட்கள்<br>• தளபாடங்கள்<br>• ஆய்வுகூடப்பொருட்கள் | 23.08.2022<br>24.08.2022 | 29.08.2022<br>திங்கட்கிழமை<br>மு.ப. 09.30 மணி |
| 02 | பல்கலைக்கழக பிரதான வளாகம் | • கணனி உபகரணப் பொருட்கள்<br>• தளபாடங்கள் | 23.08.2022<br>24.08.2022 | 29.08.2022<br>திங்கட்கிழமை<br>மு.ப. 11.00 மணி |
| 03 | இராமநாதன் நுண்கலைத்துறை | • கணனி உபகரணப் பொருட்கள்<br>• தளபாடங்கள்<br>• இசைக்கருவிகள் | 23.08.2022<br>24.08.2022 | 29.08.2022<br>திங்கட்கிழமை<br>பி.ப. 01.00 மணி |

ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் அனுமதிக் கட்டணமாக ரூபா 2000.00 ஐ பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் 970000440001846 என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். என்ற பெயரில் வைப்புச்செய்த பற்றுச்சீட்டுடன் உரிய விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பித்து சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக ஏலப்பொருட்களை பார்வையிடுவதுடன் ஏலத்திலும் கலந்து கொள்ளலாம்.

ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் பொருட்களைப் பார்வையிட்ட பின்னர் மீளளிப்பு செய்யக்கூடிய வைப்புத்தொகையாக ரூபா 15,000.00 ஐ 970000070000282 என்ற கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து செலுத்திய பற்றுச்சீட்டினை 24.08.2022 மாலை 4.00 மணிக்கு முன்னர் நிர்வாகக்கிளையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்காட்டிய திகதியில் நடைபெறும் ஏலவிற்பனையில் வெற்றியடைந்தவர்கள் ஏலத்திற்குரிய தொகையினை பணமாக உடன் செலுத்தி பொருட்களை முழுமையாக உடன் எடுத்துச்செல்லுதல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (C-4753)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிரீமியர் லீக் கால்பந்தாட்ட தொடர்

## சம்பியன் வென்றது வல்வை ப்ரண்ட்ஸ்

நவிண்டில் கலைமதி விளையாட்டு கழகம் நடத்திய கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிரீமியர் லீக் தொடரின் இறுதிப் போட்டியானது குறித்த மைதானத்தில் கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை ஆதார மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் வி.கமலநாதன் கலந்து சிறப்பித்தார்.

இறுதிப் போட்டியில் வல்வை ப்ரண்ட்ஸ் அணியினரை எதிர்த்து யங்கம்பன்ஸ் லயன்ஸ் அணியினர் மோதிய போட்டியில் வல்வை ப்ரண்ட்ஸ் அணியானது 3:1 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸ் லயன்ஸ் அணியினரை தோற்கடித்து சம்பியனாக மகுடம் சூடியது. (4)





# திருக்குமரன், லஜிதன் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட தொடர்

## வாகை சூடியது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி

அமரர்களான திருக்குமரன், லஜிதன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டத்தில் சம்பியன் கிண்ணத்தைச் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சுவீகரித்துக் கொண்டது.

அளவெட்டி மத்தி விளையாடுக் கழக வீரர்களான அமரர்கள் திருக்குமரன், லஜிதன் ஞாபகார்த்தமாக நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுபோட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்தி அணி மோதியது.

5 செற்கள் கொண்ட போட்டியில் முதல் செற்றில் இரு அணிகளும் ஒன்றுக் கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடினர். இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 27:25 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆனால் அடுத்த இரண்டு செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 25:21, 25:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (4-90)



### 17 வயது பிரிவுக்கான துடுப்பாட்ட போட்டி

# அனைத்துப் போட்டியிலும் மகாஜனக்கல்லூரி வெற்றி

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் 17 வயது அணிகளுக்கிடையே நடத்தப்படும் முதலாவது குழுநிலைப் போட்டியில் மகாஜனக்கல்லூரி அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்குத் தெரிவாகியுள்ளது. இப் போட்டி மட்டுப்படுத்தப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட போட்டியாக நடைபெற்றது.

முதலாவது போட்டியில் யா/யூனியன் கல்லூரியை எதிர்கொண்ட மகாஜனக்கல்லூரி 68 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 40.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது போட்டியில் யா/யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்கொண்ட மகாஜன 6 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

மூன்றாவது போட்டியில் யா/விக்டோரியாக் கல்லூரியை எதிர்கொண்ட மகாஜன 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நான்காவது போட்டியில் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்கொண்ட மகாஜன 242 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (4-105)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2690

**தனுஷ்**

டேய் ஏன்டா கடைக்காரன் மண்டயை உடைச்சாய்?



அப்பாதான் சொன்னாரு டார்ச்லைட் வாங்கும்போது அடிச்சு பாத்து வாங்கச் சொல்லி அதான்...

**யாழினி**




**கஜேந்தினி**

சுகர் மாத்திரை வாங்கினாலும் இந்த மெடிக்கல் கடைக்காரனுங்க மீதி சில்லறைக்கு சொக்கிலெட் தான் தாறனுங்க...



**பவிசன்**

கல்யாணமாகி 25 வருசத்தில ஒரே ஒரு தடவைதான் உங்க கணவர்கிட்ட சண்டை போட்டீங்களா... ஆச்சரியமா இருக்கே...?

ஆமா... அந்த சண்டையில அவர் வீட்டை விட்டுப் போனவர்தான் 25 வருசமா திரும்பியே வரலேயே...

**ரிஜா**

ரொம்ப நாளா எனக்கு ஒரு டவுட்டு...! கடிகாரம் கண்டுபிடிக்கும் போது எதை பார்த்து சரியான டைம் வச்சிருப்பாங்க...



**சுவேதா**

கழுதை:- என் முதலாளி என்னை ரொம்ப அடிக்கிறான்.

நாய்:- அப்ப எங்கயாவது ஓடிப்போக வேண்டியதுதானே?

கழுதை:- அப்படித்தான் நினைத்தேன். ஆனா முதலாளி பொண்ணு படிப்பில எப்ப மார்க் குறைவா வாங்கினாலும் இந்த கழுதைக்குத்தான் உன்னை கட்டி வைப்பேன் என்று சொல்லுறான் அதான் கொஞ்சம் வெயிட் பண்றேன்...

நம்பிக்கை தான் வாழ்க்கை

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனடியாக முட்டைகளை இறக்குமதி செய்யுங்கள்

## சிற்றூண்டி உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

உள்நாட்டில் முட்டை விலையை குறைக்க வேண்டும் எனில் உடனடியாக முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டும் என அகில இலங்கை சிற்றூண்டி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சமீபகாலமாக சில வியாபாரிகள் முட்டையை 70 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர்.

விலை அதிகரிப்பு காரணமாக முதியவர்கள், சிறுவர்கள் மற்றும் வறியவர்கள் அவர்களுக்கு தேவையான புரதங்களைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய போக்கு தொடர்ந்தால் போராட்டங்கள் இடம்பெறலாம் என்பதனால் முட்டையை இறக்குமதிசெய்து விலையை உடனடியாக குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு சிற்றூண்டி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இந்த வாரம் ரஞ்சன் விடுதலை?

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ரஞ்சன் ராமநாயக்க பெரும்பாலும் இந்த வாரம் விடுதலை செய்யப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரஞ்சன் ராமநாயக்க ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படவுள்ளதாகவும் அதற்கான அனைத்து ஆவணங்களும் உரிய தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்றத்தை அவமதித்ததாக ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிரான வழக்கின் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு 2021 ஜனவரி 21 ஆம் திகதி அறிவிக்கப்பட்டதுடன், தீர்ப்பின்படி அவருக்கு நான்கு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இலங்கைக்கான விமான சேவைகளை குறைத்துக் கொண்ட நிறுவனங்கள்



(கொழும்பு)

எரிபொருளை நிரப்பும் வசதிகள் இல்லாமை, இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக ஐந்து வெளிநாட்டு விமான சேவை நிறுவனங்கள் இலங்கைக்கான பயணங்களை குறைத்துள்ளன.

108 தடவைகள் இலங்கைக்கு வந்து செல்லும் பயணங்களை இந்த விமான சேவை நிறுவனங்கள் 52 ஆக குறைத்துள்ளன. மேலும் இரண்டு விமான நிறுவனங்கள் இலங்கைக்கான சேவைகளை முற்றாக நிறுத்தியுள்ளன.

எமிரேட்ஸ், கத்தார் எயார் வேஸ், எடிஹெட், ஓமான் மற்றும் எயார் இந்தியா ஆகிய விமான சேவை நிறுவனங்கள் தமது பயணங்களை குறைத்துக்கொண்டுள்ளன. சவுதி எயார் மற்றும் குவைத் எயார்வேஸ் நிறுவனங்கள் இலங்கைக்கான சேவைகளை நிறுத்தியுள்ளன.

மேலும் மாலைதீவியன், கொரியன், சலாம் எயார்வேஸ், தாய் ஸ்மைல், சைனா சதர்ன், சுவிஸ் இண்டர்நேஷனல் ஆகிய விமான சேவை நிறுவனங்கள் இலங்கையின் பொருளாதார நிலைமைகள் சீரடையும் வரை இலங்கைக்கான சேவைகளை குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவருகிறது. (நி)

# உதிரிப்பாகங்கள் தட்டுப்பாடு 20 ரயில்கள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

என்ஜின் ஒயில் மற்றும் உதிரிப்பாகங்கள் தட்டுப்பாடு காரணமாக 20 ரயில்கள் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் வழக்கமான நேர அட்டவணையின்படி இயங்கும் ரயில்கள் அதிக எண்ணிக்கையான பயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டியுள்ளதாக ரயில்வே பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

என்ஜின் ஒயிலை உடனடியாக இறக்குமதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருவதாக சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் மாத்திரம் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப்பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அபிவிருத்திஅதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்துள்ளார்

இந்தியா, கனடா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து பெருமளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# ஆளுநர் நியமனத்தில் குழப்ப நிலை

(கொழும்பு)

ஒன்பது மாகாணங்களுக்கான ஆளுநர்கள் நியமனம் தொடர்பாக தற்போது குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புடைய பலரை ஆளுநர்களாக நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆளுநர் பதவிகளுக்கு தனித்தனி பெயர்களை முன்மொழிந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 என்பதனால் தமக்கு முன்னுரிமை வழங்குமாறு கோரியுள்ளனர்.

தயா கமகே, ஜோன் அமரதுங்க நவீன் திசாநாயக்க மற்றும் வடமேல் மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ஷமேல் செனரத் ஆகியோரும் ஆளுநர் பதவிக்கு முன்மொழிந்துள்ளனர்.

இதேவேளை, பொதுஜன பெரமுன அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட மூன்று ஆளுநர்களுக்கு அந்த ஆளுநர் பதவிகளில் நீடிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு அக்கட்சி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரியவருகின்றது. (நி)

# டிசெம்பர் வரை விடுமுறையின்றி பாடசாலைகளை நடத்தத் தீர்மானம்

(கொழும்பு)

டிசெம்பர் மாத ஆரம்பம் வரையில் விடுமுறையின்றி வாராந்தம் 5 நாட்களும் பாடசாலைகளை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

கொவிட் பரவலுக்கு மத்தியில் பாடசாலைகளை நடத்திச் செல்வது குறித்த எச்சரிக்கை எதனையும் சுகாதார அமைச்சு இதுவரையில் முன்வைக்கவில்லை.

அதற்கான வழிகாட்டிகள் மற்றும் அறிவுறுத்தல்களை சுகாதார அமைச்சு வழங்கினால் அதன்படி பாடசாலைகள் செயற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

18.08.2022
ஆவணி 02, வியாழக்கிழமை
ஸப்தமி பின்னிரவு 1.42 மணிவரை
பரணி பின்னிரவு 4.22 மணிவரை
சுப நேரம் -7.35-9.05 மணிவரை
இராகு காலம் -1.35-3.05 மணிவரை
சந்திராஷ்டமம்- அத்தம்

வளவன்

**மேஷம்:** வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** நம்பிக்கைகள் நடைபெறும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், செய் தொழில் மேன்மையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, கௌரவமான நாள்.

**துலாம்:** உறவினர், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**மகரம்:** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்:** காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், இடமாற்றச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்:** உறவினர் பகை மாறும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** இல்லத்தில் உள்ளவர்களின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** வியாபார விருத்தியுண்டு, குடும்ப உறுப்பினர்கள் உங்களின் ஆலோசனையை ஏற்று நடப்பர், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பணப்பற்றாக்குறையுண்டு, பிரயாண பயமுண்டு.

**தனுசு:** பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள புதிய வழி பிறக்கும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும், வீட்டை அலங்கரிக்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்:** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், வாக்கு சமன் மேன்மையுண்டு.

நீ கோபப்பட்டால் உனக்குச் செலவு அதிகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அம்புலிமாமா

# இரு கேள்விகள்

(நேற்றைய தொடர்ச்சி)

அவன் ஞானசேகரரிடம் பிரம்ம ராட்சஸி கேட்ட இரு கேள்விகளையும் கூறி அவற்றின் விடைகள் என்ன என்று கேட்டான். அவரும் "பூவுலகில் கண் கண்ட தெய்வம் பெற்ற தாய். இது முதலாவது கேள்வியின் பதில். இரண்டாவது கேள்வியின் பதில் இரக்கம் மிகுந்த மன்னன் என பதே" என்றார்.

அப்போது சோமசேகரன் குறுக் கிட்டு "முதலாவது கேள்விக்கு ஞானசேகரர் கூறிய விடை சரியே. ஆனால் இரண்டாவது கேள்வியின் விடை தான் சரியில்லை. அதற்கும் பெற்ற தாய் என்பதே விடை. தன் குழந்தை குற்றம் புரிந்ததும் தண்டித்து விட்டு பிறகு அதற்காக வேதனைப்படுபவள் பெற்ற தாயே" என்றான்.

கனகரத்தினம் சட்டென எழுந்து காட்டிற்குள் ஓடினான். பிரம்ம ராட்சஸியும் அவனைக் கண்டு நிறுத்தி "வந்து விட்டாயா! என் கேள்விகளுக்கு இனி விடைகளைச் சொல்" என்றது. கனகரத்தினமும் "இரண்டிற்குப் ஒரே விடை தான். பெற்ற தாய் என்பதே அது!" என்றான். பிரம்ம ராட்சஸி ஒரேயடியாக மகிழ்ந்து போய் மறுவிநாடியே அது ஒரு தேவகன்னியாக மாறியது.

அதைக் கண்டு கனகரத்தினம் ஆச்சரியப்பட்டான். தேவகன்னிகையும் "ரத்தினம்! உனக்கு ஆச்சரியமாக



இருக்கிறதா? நான் முக்தமாலா என்ற யட்சிணி. ஒரு சாபத்தால் பிரம்ம ராட்சஸியாக இதுவரை இருந்து வந்தேன்.

இன்றைக்குச் சரியாக நூறு வருடங்களுக்கு முன் இப்பகுதியில் யோகீஸ்வரர் என்ற முனிவர் இருந்தார். அவரது மனைவி இறக்கவே அவர் தம் புதல்வியை அன்புடன் வளர்த்து வந்தார். இங்கு வந்த நான் அவரது அழகைக் கண்டு அவரிடம் சென்று என்னை மணந்து கொள்ளும்படிக் கேட்டேன். அவர் மறுக்கவே அவரை என் விருப்பத்திற்கு இணங்க வைக்க அவரது புதல்வியை பயமுறுத்த பிசாசு போல உருவெடுத்தேன். வீரிட்டு அலறிய அவரது மகளை நான் தூக்கிய போது அவள் துள்ளிக் கீழே விழுந்தாள்" என்று கூறித் தொடர்ந்தாள்.

தன் மகளின் அலறலைக் கேட்டு ஓடி வந்த யோகீஸ்வரர் என்னைக் கண்டு "நீ இதே உருவில் இனிமேல் இருப்பாய்" என்று சபித்து விட்டார். நான் உடனே அவரது கால்களில் விழுந்து சாப விமோசனம் வேண்டினேன்.

அவரும் மனம் இரங்கி "நீ பெண் மனம் படைத்தவளல்ல. பெற்ற தாய் தன் குழந்தையை உயிரினும் மேலாகக் காப்பாள். அது குற்றம் புரிந்தால் அதனை தண்டித்து விட்டு வேதனைப் படுவாள்.

எனவே பூவுலகில் அவள் கண் கண்ட தெய்வம். உனக்கு நூறு வருடங்களுக்கு இந்த பிரம்ம ராட்சஸி உருவமே இருக்கும். நீ நான் கூறியதை இரண்டு கேள்விகளாக்கி நீ பிடிக்கும் ஒவ்வொருவரிடமும் பதிலைக் கேள்.

எவன் சரியான பதிலைச் சொல்கிறானோ அவனைக் கண்டதும் நீ தேவ கன்னிகையாக மாறிவிடுவாய்" என்றார். நீ சரியான பதில் கூறி எனக்கு சாபத்திலிருந்து விடுதலை அளித்தாய்.

இவ்வாறு அந்த தேவ கன்னிகை கூறவே கனகரத்தினமும் "அம்மணீ! இந்த விடையை என் அறிவைப் பயன்படுத்திக் கூறவில்லை.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## பிரிந்தவர் கூடினால்

"அதில் என்ன தவறு? இல்லை, என்றும் உன்னைக் கைவிடேன் என்று அக்கினியை வலம் வந்து உறுதி எடுத்ததை மீறிவிட்டேன் அது தவறு தானே?.

பக்கத்தில் இருக்கும் சந்தோசத்தை வேறு எங்கோ தேடினேனே அது தவறு தான்" இல்லை, அதை நான் தடுத்திருந்தால் உங்கள் சந்தோசத்துக்குக் குறுக்கே நின்ற தவறை நான் செய்திருப்பேனே துக்கத்திலும் சந்தோசத்திலும் உங்களுக்குத் துணை நிற்பேன் என்று நானும்தானே உறுதி எடுத்தேன்? உங்கள் சந்தோசம் என் சந்தோசமில்லையா? இதைக் கேட்ட கோவலன்




நெகிழ்ந்து போனான். கண்ணகியை வாரி மார்போடு அணைத்து ஒரு குழந்தையை முத்தமிடுவது போல முத்தமிட்டான்.

"கண்ணகி, ஓர் ஒழுக்கங்கெட்டவளின் சந்தோசத்துக்காக என் முன்னோர் சேர்த்த செல்வத்தை எல்லாம் தொலைத்துவிட்டு இன்று ஒன்றுமில்லாதவனாக வந்திருக்கிறேன் [illegible]த்தில் குன்றிப் போனான் கோவலன்.

மாதவியை அவன் குறிப்பிட்டவிதத்தில் தன் சந்தேகம் தவறானது என்பதைக் கண்ணகி உணர்ந்தாள். 'கால் சிலம்புகளை எடுத்துப் போ' என்று சொல்லும்போது எதற்கு என்று அவள் சொல்லவில்லை. ஆனால் தன் கண்களில் இருந்து தான் நினைத்த நோக்கத்தை அவன் படித்திருக்கக் கூடும் என்று நினைத்தாள்.

திருந்தி வந்தவனை அது புண்படுத்தியிருக்குமோ என்று சந்தேகம் வந்தது. சட்டென்று, "ஒன்றுமில்லை என்று ஏன் எண்ணுகிறீர்கள்? என் கால் சிலம்புகள் இருக்கின்றன.

உங்கள் தந்தையாரிடம் நீங்கள் கற்ற வணிக அறிவு இருக்கிறது. போதாதா?" என்றாள்.

"சரியாகச் சொன்னாய் கண்ணகி, இந்த ஊரே நமக்கு வேண்டாம் நாம் மதுரைக்குச் செல்வோம் அங்கே போய் வணிகம் செய்து நான் இழந்த செல்வத்தை எல்லாம் மறுபடி சேர்த்து விடுகிறேன் நீயும் உடனடியாக என்னோடு புறப்படு கண்ணகி பதில் எதுவும் சொல்லவில்லை. உடனே தயாரானாள்.

இருவரும் புறப்பட்டார்கள். வியாபார நுணுக்கமும் முதலும் இருக்கிறவர்கள் எல்லாருமே வணிகம் செய்து பொருள் சேர்த்து விடுகிறார்களா? விதி அவர்கள் வாழ்க்கையில் கொடூரமாக விளையாடக் காத்திருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 54

இப்பொழுது அவர்கள் தங்களுடைய எஜமானருக்கு எதிராகத் திரும்பி விட்டனர் என்பது, உக்ரைனின் ஆட்சி உயர் சிறுகுழுவிற்குள்ளேயே, கடந்த இரு வாரங்களில் நடந்துள்ள மிகக் கடுமையான பூசலின் பிரதிபலிப்பில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைத்தான் குறிப்பிடுகிறது.

யானுகோவிச்சிற்கு ஆதரவாக உக்ரைன் தேர்தல் குழு தீர்ப்புக் கொடுத்தால் அதை ஏற்க மாட்டோம் என்று அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சராக இருந்த கொலின் பௌலும் பல ஐரோப்பிய அரசாங்கங்களும் பிழைக்கு இடமின்றித் தெளிவுபடுத்திய பின்னர் நாட்டு ஆட்சியின் ஆதரவாளர்கள் பலரும் கட்சி மாறி விட்டனர். இவர்களில் இராணுவத் தலைவர்கள், உளவுத்துறை உயர் அதிகாரிகள் யானுகோவிச்சின் தேர்தல் பிரசாரத்திற்குத் தலைமை தாங்கி நடத்தியிருந்த மத்திய வங்கியின் தலைவர் செர்ஜி டிஜ்போகோ போன்ற மற்ற மூத்த அதிகாரிகளும் அடங்கியிருந்தனர்.

அத்துடன், அரசாங்க முகாமிற்குள்ளேயே கருத்து வேறுபாடுகளும் தோன்றின. நாட்டின் கிழக்குப் பகுதியும் யானுகோவிச்சிற்கு வலுவான கோட்டை போல் இருந்த பகுதியுமான டான்பாஸ், யுஷ்செங்கோவ் ஜனாதிபதியானால் நாட்டில் இருந்து பிரிந்து சென்றுவிடுவதாக அச்சுறுத்தல் கொடுத்தவுடன் தனக்குப்பின் வரவேண்டும் என்று கருதியிருந்த நபருக்கான ஆதரவைக்கூட ஜனாதிபதி குச்மா வெளிப்படுத்தப்பட்ட வகையில் குறைத்துக் கொண்டு விட்டார்.

நாடு துண்டாடப்படுவதை குச்மா தீவிரமாக எதிர்த்தார். இதனால் யானுகோவிச்சிற்கான ஆதரவை விலக்கக் கொண்டு அவர் புதிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்ற அழைப்பை விடுத்திருந்தார். தன்னுடைய ஆதரவு சக்திகளைத் திரட்டிக் கொண்டு மறு அமைப்புச் செய்து கொள்ளுவதற்குப் போதுமான சூழ்நிலை வந்த பின்னர் அவ்வாறு மறுதேர்தல் வேண்டும் என்றும் அவர் கருதியிருந்தார்.

மிகக் கடுமையான உறையும் குளிர் சூழ்நிலையில், பல நாட்கள் கீவின் மத்திய பகுதியில் முகாமிட்டிருந்த யுஷ்செங்கோவிற்கு ஆதரவு கொடுத்திருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பை "ஜனநாயகத்திற்கான வெற்றி" என்று பாராட்டி களித்தனர்.

நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை வழங்கியபோது புடின், புது டில்லியில் இருந்தார். Hindu செய்தித்தாளுக்குக் கொடுத்த பேட்டியில் ஐரோப்பாவும் அமெரிக்காவும் "பயங்கரவாதத்தின் தூதர்களுக்கு" இணக்கம் தரும் வகையில் நடந்து கொள்ளுகின்றன என்று அவர் தெரிவித்தார். ஒரு அசாதாரணமான, தீவிர முறையில் அமெரிக்கா மேற்கொண்டுள்ள ஈராக் கொள்கையையும் அவர் தாக்கினார். முன்பு ஆப்கானிஸ்தானத்தில் இருந்தது போலவே, ஈராக் "பயங்கரவாதத்தை வளர்க்கும் இடமாக மாறிக்கொண்டு வருகிறது. புதிய பயங்கரவாத அமைப்புக்களுக்கு ஆயிரக் கணக்கில் உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனர்" என்றும் அவர் கூறியுள்ளார்.

### இரண்டாம் சுற்று மறு வாக்குப் பதிவு

இரண்டாம் சுற்று மறு வாக்குப்பதிவு டிசம்பர் 26 அன்று நடைபெற்றது. விக்டர் யுஷ்செங்கோ 52 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றியாளராக அறிவிக்கப் பட்டார். யானுகோவிச் 44 சதவீத வாக்குகளைப் பெற்றார். மேற்கத்தேய கண்காணிப்பாளர்கள் மறு வாக்குப்பதிவு முந்தைய வாக்குகளை விட ஒட்டு மொத்தமாக நியாயமானதாகக் கருதப்பட்டதாகத் தெரிவித்தனர். தேர்தல் முடிவுகள் பின்வருமாறு.

இரண்டாம் சுற்று மறுவாக்குப்பதிவில் வாக்களிக்க 37,613,022 பேர் தகுதி பெற்றிருந்தனர். அதில் 29,068,971 பேர் வாக்களித்தனர். செல்லுபடியற்ற வாக்குகள் 422,492 ஆகும்.

**இருவருக்குமிடையே நடந்த இரண்டாம் சுற்றுத் தேர்தலில் விக்டர் யுஷ்செங்கோ 15,115,712 வாக்குகள் (51.99%) பெற்று முதலிடத்தையும் பிராந்தியங்களின் கூட்டுக் கட்சி வேட்பாளர் விக்டர் யானுகோவிச் 12,848,528 வாக்குகள் (44.20%) பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.**

வாக்களிப்பு வீதம் 77.28% ஆகும். எல்லா வேட்பாளர்களுக்கும் எதிராக வாக்களித்தவர்கள் 682,239 ஆகும்.

மறு வாக்குப்பதிவின் இறுதி முடிவுகளில் விக்டர் யுஷ்செங்கோ 51.99% வாக்குகளைப் பெற்றார், இது +5.39% அதிகரிப்பையும் விக்டர் யானுகோவிச் பெற்ற 44.19% வாக்குகள் -5.27% குறைவையும் காட்டியது.

விக்டர் யானுகோவிச் டிசம்பர் 31 2004 அன்று தோல்வியை ஒப்புக் கொண்டார். பின்னர் அதே நாளில் உக்ரைனின் பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார்.

இரண்டாம் சுற்று வாக்களிப்பில் யுஷ்செங்கோ வெற்றி பெற்ற போதிலும், ஒவ்வொரு சுற்றுக்கும் இடையே பிராந்திய வாக்களிப்பு முறைகள் பெரிய அளவில் மாறாமல் இருந்தன. பல தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் யானுகோவிச்சை ஆதரித்தன. மேற்கு மற்றும் மத்திய பகுதிகள் யுஷ்செங்கோவை ஆதரித்தன.

(தொடரும்)


# நல்லூர்க் கந்தனுக்கு புதிய குமாரகோபுரம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமிகோவில் சிறப்பை அறியாதவர்கள் இல்லை. ஈழத்தமிழர்களின் தலையாய கோவிலாக விளங்குவது நல்லூர்க் கந்தசுவாமி கோவில். தமிழ் வேந்தர் காலத்துக் கோவில் முற்றாக அழிக்கப்பட்டு கோவில் இருந்த இடத்தில் கிறிஸ்தவ ஆலயம் கட்டப்பட்டது.

சுமார் 200 ஆண்டு காலம் நல்லூரை நினைத்து சைவ மக்கள் போர்த்துக்கேயர் இடித்த கோயில் கற்களில் சிலவற்றைக் கொண்டுபோய் தமது வீடுகளிலே மறைவாக வைத்து வழிபாடு செய்தனர். அகத்தால் அழுத மக்கள் நல்லூர்க் கந்தனை நினைத்து வீடுகளில் கந்தபுராணத்தைப் பாடி முருகனை மறவாது வழிபட்டனர்.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் நல்லூரில் வாழ்ந்த பெரியார் ரகுநாத மாப்பாண முதலியார் பல வருடங்களாக பலர் அகத்தில் சுமந்த நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை தனது சொந்த முயற்சியால் நிலத்தை விலை கொடுத்து வாங்கி தனது உடைமைகளைப் பயன்படுத்தி கோயிலைக் கட்டுவித்தார்.

அப்பெருமகனார் சைவத் தமிழ் உலகத்துக்குச் செய்த அளப்பெரிய தொண்டே இன்று நாம் காணும் நல்லூர்க் கந்த சுவாமி கோயில் என்னும் பெருங்கோயிலாகும். ஒல்லாந்தர் காலத்தில் கல்வியறிவும் நில புல சொத்துக்களால் சிறப்பும் பெற்ற ஸ்ரீமான் ரகுநாத மாப்பாண முதலியார் தனது கெட்டித் தனத்தால் ஒல்லாந்தரிடம் அனுமதி பெற்று இக்கோவிலை நிறுவினார்.



அன்று அவர் உயரிய சிந்தனையோடு செய்த மாபெரும் முயற்சி சைவத் தமிழர்களின் உன்னத பண்பாடு நிலைபெறுவதற்குவித்திட்டது. ஸ்ரீமான் ரகுநாத மாப்பாண முதலியாரின் பரம்பரையில் வந்தவர்கள் இவ்வாலயத்தை இமைப்பொழுதும் மறவாது கட்டிக்காத்தனர்.

நல்லூர் முருகனுக்கு நான்கு கோபுரங்கள் அமைக்கப்பட்டு அழகாக காட்சியளிக்கிறது. இக் கோவிலின் இரண்டு பெரிய கோபுரங்களை உருவாக்கிய பெருமை சென்ற ஆண்டு அமரத்துவம் அடைந்த அறங்காவலர் குகஸ்ரீ குமார தாஸ் மாப்பாணமுதலியாரைச் சாரும். இந்த ஆண்டு தந்தையின் வழியில் ஆலயத்தை சீராக நிர்வகித்து வரும் நல்லூர் தேவஸ்தானத்தின் 10ஆவது அதிகாரி என போற்றப்படும் குகஸ்ரீ குமரேஸ் சயந்தன மாப்பாண முதலியாரால் புதிய குமார கோபுரம் உருவாக்கப்பட்டுள்ளது.

பஞ்சதளத்தைக் கொண்ட குமார மகாராஜா கோபுரத்துக்கான கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. நல்லூர்க் கந்தனின் திருப்பூங்கொல்லையில் உள்ள அதி அற்புதம் வாய்ந்த தீர்த்தக் கிணற்றுக்கருகில் இத்தெய்வீகத் திருக்கோபுரம் அழகாக கட்டப்பட்டுள்ளது. கோபுரத்துக்கு இரு மருங்கிலும் இருபெரும் மணிக் கூட்டுக் கோபுரம் காட்சியளிக்கிறது. நல்லூர்க்கந்தனின் அற்புதத்தால் இத் திருப்பணி நிறைவு பெற்றுள்ளது. எந்தவித ஆரவாரமுமின்றி அமைதியாக திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளன.

நல்லூரில் திருப்பணிக்கு உதவுங்கள் என எவரையும் கூவி அழைப்பதில்லை. ஆனால், அடியார்கள் திருப்பணிதொடங்கிவிட்டால் தமது காணிக்கையை உண்டியலில் சேர்த்துவிடுவார்கள். ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகைத் திருவிழாவில் கந்தனுடைய சந்நிதானத்தில் ஏதோ ஒரு புதுமை இடம்பெறும். இந்த ஆண்டு மகாகுமார கோபுரம் காட்சியளிக்கவுள்ளது.

இந்தியாவில் உள்ள தலங்களுக்கு ஈடாக இலங்கையில் நல்லூர்க் கந்தன் ஆலயம் மிளிர்வது சைவத் தமிழர்கள் செய்த மாதவமே. பஞ்ச கோபுரங்களோடு, ஏழு மணிக் கோபுரங்களோடு, தங்கக் கூரையோடு வேலன் வீற்றிருக்கிறான். இவ்வாண்டு அவன் அழகிற்கு கம்பீரத்துக்கு மகா குமார கோபுரமும் எழுந்து நிற்கிறது.

நல்லூர்க் கந்தனின் பெருந் திருவிழா தொடங்கிவிட்டால் நாடே புனிதமடைந்துவிடும். எத்தனை இலட்சம் மக்கள் நல்லூரை நோக்கி வருகிறார்கள். நல்லூர் அதிசயம் கண்டு ஆனந்தம் கொள்கிறார்கள். கீழைத்தேசத்தவர்கள் மட்டுமன்றி மேலைத்தேசத்தவர்களும் நல்லூர் மேன்மையை தங்கள் மொழிகளில் பதிவு செய்கிறார்கள். நல்லூர் வேலன் இவ்வாண்டு கார்த்திகை வரப் பிரசாதமாக குமார கோபுரத்தை தரிசிக்க வைத்துள்ளான். நாளை வெள்ளிக்கிழமை ஆவணி மூன்றாம் நாள் காலை 6 மணிக்கு கந்தனின் நந்தவனத்து பூங்கொல்லையில் குமார கோபுரத்தை அண்ணாந்து கரங்கூப்பி கண்ணாரக் கும்பிடுவோம் அனைவரும் வாரீர்.

**கலாநிதி.ஆறு.திருமுருகன்
தலைவர், தெல்லிப்பழை
துர்க்காதேவி தேவஸ்தானம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுக் கப்பலின் வருகை எந்த நாட்டையும் பாதிக்காது

## சீனா அறிவிப்பு



(கொழும்பு)

தமது உயர் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கப்பலின் செயற்பாடுகள் எந்தவொரு நாட்டின் பாதுகாப்பையும் பாதிக்காது என்றும் எந்தவொரு மூன்றாம் தரப்பினரும் தடையாக இருக்கக் கூடாது எனவும் சீனா தெரிவித்துள்ளது.

நேற்று கருத்து வெளியிட்ட அவர், "யுவான் வாங் 5 கப்பல், இலங்கையின் தீவிர ஒத்துழைப்புடன், இந்தியா-அமெரிக்காவின் கவலைகளுக்கு மத்தியில் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் வெற்றிகரமாக நிறுத்தப்பட்டுள்ளது.

யுவான் வாங்-5 கப்பலின் கடல் அறிவியல் ஆராய்ச்சி நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்திற்கு இசைவானவை என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். இது வழக்கமான சர்வதேச நடைமுறையாகும்.

சில நாடுகள் கொழும்பிற்கு அழுத்தம் கொடுப்பதும் அதன் உள் விவகாரங்களில் மொத்தமாக தலையிடுவதும் பாதுகாப்புக் கவலைகள் என்று கூறுவதும் முற்றிலும் நியாயமற்றது என்றும் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வெங்வென் பின் தெரிவித்தார். (நி)



# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-08, கொழும்புத்துறை வீதி ஆதன இல 236/13 என்ற இலக்கத்தை உடைய ஆதனமானது சம்பந்தர் மாணிக்கவாசகர் Dr.வெற்றிவேல் என்ற பெயரில் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

அதனடிப்படையில் எமக்கு சமர்ப்பிக்கப்பட்ட உறுதிகளில் பிரசித்த நொத்தாரிசு சி. இளங்கீரன் முகதாவில் 2012.08.2[illegible] ஆம் திகதி யாழ்ப்பாணம், இராசாவின் தோட்ட வீதி தற்காலம் ஐக்கிய அமெரிக்க தேசத்தில் வாழ்ந்து வரும் டாக்டர் வெற்றிவேலு மகேஸ்வரனின் அற்றோனித் தத்துவக்காரன் தில்லையம்பலம் சிறீதரன் மூலம் வெளிப்பட்டு யாழ்ப்பாணம் கொழும்புத்துறை மேற்கு கந்தர் மணியர் வீதியைச் சேர்ந்த வைத்திலிங்கம் கிருபாகரனுக்கு அறுதியாக வழங்கப்பட்டுள்ளது.

அவ் உறுதியில் இவ் ஆதனங்கள் 1934 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு பி.காசிப்பிள்ளை முன்பாக 530 ம் இலக்கத்தில் தனது பெற்றோர் காலஞ்சென்றவர்களான சண்முகம் அப்பாக்குட்டி வெற்றிவேலுவும் பெண் பராசக்தியும் ஆகியவர்களுக்கு நிறைவேறிய அறுதி உறுதியால் தனக்கடைந்த உரித்தும் தனதாட்சியுமானதும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், இவ்வுறுதி தொலைந்து விட்டதாக யாழ்ப்பாண மாவட்ட காணிப் பதிவாளர் ஒப்பமிட்ட கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த ஆதனத்தை வைத்திலிங்கம் கிருபாகரன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு J.S.A மதுரநாயகம் முகதாவில் 2016.05.04 ஆம் திகதி 2610 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஜேசுதாசன் ஜோய்ஸ் நியூட்டனும் பெண் சுதர்சினி உம் என்பவர்களுக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

அதன்பின் ஜேசுதாசன் ஜோய்ஸ் நியூட்டனும் பெண் சுதர்சினியும் என்பவர்கள் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 25.04.2019 ஆம் திகதி 10640 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் நவராசாவும் பெண் ஞானலட்சுமிக்கும் அறுதியாக வழங்கியுள்ளனர்.

ஆதன அட்டவணை :- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணம் மாநகரசபை, யாழ்ப்பாண பிரதேச செயலகம், கிராம அலுவலகப் பிரிவு J/62, சுண்டிக்குளி இறை "ஆசைவளவும் திடலிற்புலமும்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் அ.சந்தியாம்பிள்ளை அவர்களால் 22.08.1979 ஆம் திகதி அளந்து 1-8 துண்டுகளாக பிரிவிட்டு தயாரித்த இலக்கப் படத்தில் துண்டு 8 என சுட்டப்பட்ட பாகம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 5 குளி 12.7 இதனை உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் பி. புஸ்பராஜா அவர்களின் 20.04.2019 ஆம் திகதி அளந்து 1-4 துண்டுகளாக பிரிவிட்டு தயாரித்த இலக்கப் படத்தின்படியும் ஆட்சியின்படியும் விஸ்தீரணம் நிலப்பரப்பு 5 குளி 11.98 குறித்த 6361 இலக்கப் படத்தில் துண்டு 3 எனச் சுட்டப்பட்ட பாகம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 9 மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் . இதன் எல்லை

கிழக்கு-குறித்த 6361 ம் இலக்கப் படத்தில் துண்டு 4 என சுட்டப்பட்ட பாகம்

வடக்கும் மேற்கும்-குறித்த 6361 ம் இலக்கப் படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்ட 12 அடி அகலமான அணுகு வழிப்பாதை

தெற்கு-குறித்த 6361 ம் இலக்கப் படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட பாகம் இதடங்கலும்

தற்போது செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் நவராசாவும் பெண் ஞானலட்சுமியும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு ஆதனவரிப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்ஆதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் நவராசாவும் பெண் ஞானலட்சுமியும் எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-4750)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -18 செம்மா தெருவில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 25, 25A என்ற இலக்கம் கொண்ட ஆதனமானது சுல்தான் அப்துல் காதர் கசன்மரிக்கார் என்ற பெயரிலே ஆதனவரி பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தை பிரிசித்த நொத்தாரிசு C.ஆறுமுகம் முகதாவில் 23.10.1959 ஆம் திகதி 1540 ம் இலக்க உறுதி தொலைந்தமையை உறுதிப்படுத்தும் சான்று காணப்படுகின்றது.

பின்னர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு Y.M. ரட்ணாஜகே முகதாவில் 13.10.2011 ம் திகதி 201 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அப்துல் சமாத் ஜெஸ்மின் பேகம், அப்துல் சமாத் இஸ்மத் நூன் கைம்பெண் சும்சுன் நமீயாவும், இஸ்மத் அஸ்மியும், இஸ்மத் பிஸ்மியும், அப்துல் சமாத் முகமட் ஜின்னாவும், அப்துல் சமாத் சம்சூன் நிகாராவும், அப்துல் சமாத் பைரூஸ் அப்துல் சமாத் செரிவிகசானும், அப்துல் சமாத் இக்ரமும் நன்கொடையாக அப்துல் கரீம் சித்தி சதீஜாவுக்கு வழங்கியுள்ளார்கள்.

பின்னர் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு Y.M.ரட்ணாஜகே முகதாவில் 17.11.2011 ஆம் திகதி 210 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அப்துல் கரீம் சித்தி சதீகா நன்கொடையாக அப்துல் சமாத் மொகமட் ஜின்னாவுக்கு வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி மாநகர சபை எல்லைக்குட்பட்ட யும்மா பள்ளிவாசல் ஒழுங்கை வண்ணார்பண்ணை கிழக்கு இறை "அணிஞ்சிலடி" நிலப்பரப்பு குளி 12.75 இது 02.10.2011 ஆம் திகதி நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் தயாரித்த 443 ம் இலக்க நில அளவைப் படத்தில் குறிப்பிட்ட பன்னிரண்டு தசம் ஏழு ஐந்து (குளி 12.75) அதற்குள் அடங்கிய கட்டடமும் இதன் எல்லைகள்.

வடக்கு:- ஒழுங்கை
கிழக்கு:- LSP கதிரவேற்பிள்ளை
தெற்கு:- LSP குமாரசாமியும், LSP கதிரவேற்பிள்ளையும்
மேற்கு:- LSP மதனாசாகிப் சாகுல் கமீட்
இதடங்கலும்

தற்போது அப்துல் சமத் முகமட் ஜின்னா இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/முழுமையாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அப்துல் சமத் முகமட் ஜின்னா என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-4751)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-09 அம்பாள் வீதியில் ஆதன இலக்கம் 7/2 என்ற இலக்கம் கொண்ட ஆதனமானது K.ராமலிங்கம் பெண் சிவகங்கை என்னும் பெயரில் எமது ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தை நித்தியானந்தன் சிவஜெயந்தாவும் பாலகிருஷ்ணன் சிவஜனனியும் சிவலிங்கம் சிவகுமாரனும் பிரசித்த நொத்தாரிசு M.M.M.ரமீஸ் முகதாவில் 2012.08.06 ஆம் திகதியிடப்பட்ட 2396 இலக்க பிரகடன உறுதி மூலம் தமது மாதா காலஞ்சென்ற இராமலிங்கம் சிவலிங்கம் பெண் சிவகங்கை வழியாக தம்மை வந்தடைந்த மாதா வழி முதுசமென பிரகடன உறுதி நிறைவேற்றியுள்ளனர்.

பின்னர் குறித்த ஆதனத்தை நித்தியானந்தன் சிவஜெயந்தாவும் பாலகிருஸ்ணன் சிவஜனனியும் பிரசித்த நொத்தாரிசு M.M.M.ரமீஸ் முகதாவில் 06.08.2012 ஆம் திகதியிடப்பட்ட 2397 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் சிவலிங்கம் சிவகுமாரனுக்கு நன்கொடை வழங்கியுள்ளனர்.

சிவலிங்கம் சிவகுமாரன் தனது அற்றோனித் தத்துவக்காரர் சின்னத்துரை குகனேசன் மூலம் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு S.கஜேந்திரகுமார் முகதாவில் 20.10.2020 ஆம் திகதியிடப்பட்ட 4153 ம் இலக்க அறுதி உறுதி மூலம் மாரியப்பன் கமலனும் பெண் சுபேதாவிற்கும் அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன இடாப்பு:-வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று அரியாலை இறை உள்ளூராட்சி அதிகாரசபை யாழ்ப்பாணம் மாநகரசபை பிரதேச செயலர் பிரிவு நல்லூர் கிராமசேவகர் பிரிவு J/94 "சோனகன் காட்டு வாசல்" நிலப்பரப்பு 01.குளி 12.37 பயிர் வகைகளும் இது 2019.09.19 ஆம் திகதி உத்தரவு பெற்ற உலாந்தா திரு.S.பாலேந்திரன் அவர்களால் அளந்து வரையப்பட்ட 2019/1319 ம் இலக்கப் படத்தில் 1 ம் இலக்கத் துண்டாக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு:- விக்னேஸ்வரராசா அமலராஜீம் பெண் ஜெயப்பிரியாவிற்கும் நாயன்மார் கட்டு வெயிலுகந்த பிள்ளையார் கோவில் ஆதனமும்.
வடக்கு:- சரத் பெண் மனோன்மணியின் ஆதனம்.
மேற்கு:- தவகுலநாதன் பெண் வசந்திக்கும் மனோன்மணிக்கும் உரிய ஆதனமும், பாதை முகப்பும்.
தெற்கு:- கைலாசபதி பெண் நாகேஸ்வரியினாதனம். இதடங்கலும் இதற்கு சேர்ந்தவைகளனைத்தும்.

தற்போது இவ்வாதனத்தை மாரியப்பன் கமலனும் பெண் சுபேதாவும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்கள். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ/பகுதியாகவோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவண்ங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது மாரியப்பன் கமலனும் பெண் சுபேதாவும் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-4752)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் எதை உறுதியாக நினைக்கிறானோ அதுவாகவே அவன் மாறிவிடுவான்.
– புனித பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடபுலத்தை அழிக்கவல்ல போதைப்பொருள் பாவனை

விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் தமிழர் தாயகத்தில் நிலைநிறுத்தப்பட்டிருந்த ஒழுக்கம், கட்டுப்பாடு, கலை, கலாசாரம், பண்பாடு என்பனவற்றை ஒரு கணம் நினைத்துப் பார்க்கின்றோம்.

எதிரியும் போற்றவல்ல பண்பாட்டு விழுமியத்துடன் வாழ்ந்த எங்கள் தமிழினத்தின் இன்றைய நிலையை 'நினைக்கும்போது, வேதனை இதயத்தை அடைக்கிறது.

தமிழினத்துக்கென இருந்த ஒரு பெரும் தலைமை – உலகை வியக்க வைத்த தியாகம் – அதனையும் தாண்டிய சுயஒழுக்கம் என எல்லாம் சேர்ந்து தமிழினத்தை தலைநிமிர வைத்தது.

என்ன செய்வது கம்பன் சொன்னதுபோல இது விதியின் பிழை. ஆம், விடுதலைப் புலிகள் இல்லாதபோது எங்களின் பண்பாடும் பழக்கவழக்கமும் ஒழுக்கவிழுமியமும் சிதைவுறலாயின.

அதிலும் எத்துணை உயர்ந்த தியாகத்தின் சொந்தக்காரர்களாகிய நாங்களே எங்கள் தியாகத்தைக் கொச்சைப்படுத்திக் கொண்டோம்.

உண்மையில் விடுதலைப் புலிகள் இல்லாத போதும் அவர்கள் வகுத்துத் தந்த பாதையில் எங்கள் இனத்தின் பெருமையைப் பாதுகாத்து ஒழுக்கவிழுமியங்களைப் பேணி, கலை, பண்பாட்டைக் காத்து அவர்கள் செய்த தியாகத்துக்கு நன்றி செலுத்த வேண்டியவர்கள் நாங்கள்.

ஆனால் இன்று வடபுலம் முழுவதிலும் போதைப்பொருள் வர்த்தகம் உச்சம் பெற்றுள்ளது.

வடபுலத்தின் சில இடங்கள் போதைப்பொருள் களஞ்சியமாக உள்ளன.

அரும்ந்த இளைஞர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி இந்த உலக வாழ்வை அழித்துக் கொண்டுள்ளனர்.

தவிர, போதைப்பாவனைக்கு ஆளான பிள்ளைகளால் அவர்களின் குடும்பங்கள் படும் துன்பமும் துயரமும் கொஞ்சமல்ல.

இதற்கும் மேலாக, அதீத போதைப் பாவனையால் திடீரென மரணிக்கும் சம்பவங்கள் திணுக்குற வைக்கின்றன.

இந்த ஏக்கத்தோடு திரும்பிப் பார்க்கையில், மாணவர்கள் மத்தியிலும் போதைப் பயன்பாட்டை ஏற்படுத்துவதில் போதைவஸ்து வியாபாரிகள் தீவிரமாக உள்ளனர் என்ற செய்தியால் தலை சுக்கு நூறாகிறது.

இவ்வளவும் நடந்தும் எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் ஏதும் அறியாதவர்களாக இருப்பதுதான் எங்கள் இனத்தின் உச்சமான சாபக்கேடு.

இதை நாம் கூறும்போது பொலிஸார் என்ன செய்கிறார்கள் என்று நீங்கள் கேட்டால், வேலியே பயிரை மேயும் போது... என்று பதிலளிப்பதைத் தவிர வேறு ஏதுமில்லை.

ஓ! தமிழ் இனமே தனிநாடு என்றாய், வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி, பொலிஸ் அதிகாரம், காணி அதிகாரம் என ஏலவே மனனம் செய்த பட்டியல் கனவிலும் பிசத்தலாய் ஓடுகிறது.

ஆனால் இங்கோ உன் இளம் சந்ததி போதைவஸ்தில் புதையுண்டு கிடக்கிறது.

இது கண்டு விழிப்படையாமல் என்ன செய்யப் போகிறாய். ஒரு கணம் சிந்தித்துப் பார்.

## குழந்தையின் பசிக்காக பால்மா திருடிய தந்தை

(கொழும்பு)

அளுத்கமவில் உள்ள பல்பொருள் அங்காடியில் இருந்து 3,100 ரூபா பெறுமதியான குழந்தைகளுக்கான பால்மாவை திருடிய குற்றச்சாட்டில் 30 வயதுடைய மீனவத் தொழில் புரியும் நபரொருவர் அளுத்கம பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது ஒரு வயது எட்டு மாத குழந்தையின் பசியை போக்குவதற்காக இவ்வாறு பால்மாவை திருடியதாக அவர் அழுது கொண்டே பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

சந்தேகநபர் பல்பொருள் அங்காடிக்கு சென்று பால்மாவை எடுத்து அவர் அணிந்திருந்த சட்டையில் மறைக்க முற்பட்ட போது, அங்கு பணியாற்றும் பெண் ஊழியர் ஒருவர் சம்பவத்தை பார்த்து அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிக்கு தகவல் தெரிவித்துள்ளார். (ம-7)

## வெளிநாடு செல்வோருக்கு கட்டுநாயக்கவில் தனி நுழைவாயில்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கை பணியாளர்கள் விமான நிலையத்திற்குள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் விசேட நுழைவாயில் திறக்கப்படவுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 1 ஆம் திகதி இந்த விசேட நுழைவாயில் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கை பணியாளர்கள் எதிர்நோக்கும் சிரமங்களை தவிர்ப்பதே இதன் நோக்கம் என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். (நி)

## மகளின் பாடசாலைக்கு முன் மனைவியை குத்தி கொன்ற தந்தை

மதவாச்சி, மஹதிவுல்வெவ பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்.

மகளின் பாடசாலைக்கு முன்பாக தந்தையினால் தாயே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

மனைவியை கொலை செய்தார் எனக் கூறப்படும் நபர் பின்னர் கிருமி நாசினியை உட்கொண்டதில் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் 3 கூரிய ஆயுதங்களும் சந்தேகநபரிடம் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (ம-7)

## 16 வயது மாணவனின் உயிரைப் பறித்த கணினி

கணினி விளையாட்டுக்கு அடிமையாகி அதனால் மனோரீதியாக பாதிப்புற்ற 16 வயது பள்ளி மாணவன் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவமொன்று நேற்று கம்பளை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், கம்பளை, எரகொல்ல லென்டன்ஹில் பிரதேசத்தைச் சேர்ந்த நவீன் மாலிங்க விஜேரட்ண என்ற மாணவனே தனது வீட்டுக்குள் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

அதாவது, மகன் இரவு முழுவதும் தனது அறைக்குள் இருந்து தூங்காமல் கணினி விளையாட்டில் ஈடுபடுவதை வழக்கமாக கொண்டிருந்ததாக உயிரிழந்த மாணவனின் பெற்றோர் தமது சாட்சியத்தில் தெரிவித்துள்ளனர்.

இதன்போது குறித்த மாணவனின் இளைய சகோதரர் தனது சாட்சியத்தில் அண்ணன் தினமும் கணினி விளையாட்டில் ஈடுபடும்போது அந்தப்பக்கம் போ இந்தப்பக்கம் போவென அறைக்குள் தனியாக இருந்து சத்தமாக பேசி சண்டையிட்டுக் கொள்வதாகவும் குடும்பத்தாருடன் பேசுவதனை விரும்புவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த மாணவனால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றும் விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்டது. அதில் அம்மா, அப்பா என்னை மன்னித்துவிடுங்கள். நான் நீண்ட தூரம் போகிறேன்.

நான் எந்த ஒரு பெண் பிள்ளையினாலும் இந்த முடிவை எடுக்கவில்லை. தம்பி தங்கையை நன்றாக பார்த்துக்கொள்ளுங்கள் என எழுதி வைத்துள்ளார். (ம-7)

## அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம்
### அனைத்து பல்கலை மாணவர் ஒன்றியம் அழைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிரான பாரிய போராட்டத்திற்கு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. பல்வேறு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இன்று பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள போராட்டக்காரர்களை விடுவிப்பது, வாழ்க்கைச் செலவுகளை கொண்டு செல்ல நிவாரணம் வழங்கப்பட வேண்டும் மற்றும் செயலிழந்துள்ள பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை வழமைக்கு கொண்டு வருதல் உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (நி)

## 24 ஆம் திகதி நாடு திரும்புகிறார் கோட்டா

(கொழும்பு)

தாய்லாந்தில் தங்கியுள்ள இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் இருபத்து நான்காம் திகதி நாடு திரும்பவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜபக்ஷ குடும்பத்தின் நெருங்கிய உறவினரும் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்கள் எழுச்சியினை எதிர்கொள்ள முடியாமல் கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டு வெளியேறி மாலைதீவு சென்று அங்கிருந்து சிங்கப்பூர் சென்று அங்கிருந்து வெளியேறி தற்போது தாய்லாந்தில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## யூரியா உரம் வழங்குவதற்கான ஒன்லைன் பதிவு ஆரம்பம்

(கொழும்பு)

பெரும் போகத்தில் மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்குவதற்கான ஒன்லைன் பதிவு தொடங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு 'தெரிவித்துள்ளது.

www.agrarian.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக விவசாயிகள் பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2022/23 பருவத்தில் சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு யூரியா உரத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர பணிப்புரை விடுத்துள்ளார்.

நெல் பயிரிட்ட விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்கப்பட்ட அதே விலையில் அதாவது 50 கிலோ எடை கொண்ட யூரியா மூட்டை 10,000 ரூபாவுக்கு சோள விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## வவுனியா கணேசபுரத்தில் சட்டவிரோத மின்கம்பியில் சிக்கிய காட்டு யானை பலி

வவுனியா கணேசபுரம் பகுதியில் நேற்று காலை அனுமதியற்ற மின்கம்பியில் சிக்கி காட்டு யானை உயிரிழந்ததாக வவுனியா வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தோட்டத்தைச் சுற்றி போடப்பட்டிருந்த அனுமதியற்ற மின்சாரம் தாக்கியதில் காட்டு யானை உயிரிழந்ததாகவும் சுமார் எட்டு அடி உயரமுள்ள 25 வயதுடைய யானை ஒன்று மின்கம்பியில் மோதி உயிரிழந்ததாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த காட்டு யானையின் சடலம் தொடர்பான பிரேத பரிசோதனை நேற்று பிற்பகல் வடமாகாண கால்நடை வைத்தியர் பா.கிரிதரனால் மேற்கொள்ளப்பட்ட நிலையில், மின்சாரம் தாக்கி காட்டு யானை உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனையின் போது தெரியவந்துள்ளது.

அனுமதியின்றி மின்சாரத்தை இணைத்த தோட்டத்தின் உரிமையாளரான 50 வயதுடைய பெண் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் வவுனியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்ப் நிறுவனத்தால் கண்ணிவெடி அகற்றும் பணி துரிதகதியில்

(கண்டாவளை)

இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்கா நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் சார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2022 ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள சுதந்திரபுரம் பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் 21 இலட்சத்து 50 ஆயிரத்து 344 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து 33 ஆயிரத்து 922 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக சார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

குறித்த பணிகள் தொடர்பில் நேற்று அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள சுதந்திரபுரம் பகுதியிலும் அம்பகாமம் பகுதியிலும் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-315)

# கப்பலேந்தி மாதாவின் நகைகள் திருட்டு

(தருமபுரம்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு க்ப்பலேந்தி மாதா ஆலயத்தில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆலயத்தின் வருடாந்த பெருவிழாவை முன்னிட்டு கட்டைக்காடு ஆலயத்தில் அதிகளவான பக்தர்கள் இரு தினாங்களாக கூடியிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மதியம் கப்பலேந்தி மாதாவின் நகைகள் இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டன.

இச்சம்பவம் குறித்து மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (4-316)

# பணிப்பாளர் சபை தெரிவு

(கரணவாய்)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய பணிப்பாளர் சபை தெரிவு கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது.

புதிய பணிப்பாளர் சபைக்கு தலைவராக கலாநிதி.ஐ.யோகராசா உபதலைவராக இ.சுரேரரஞ்சன் மற்றும் உறுப்பினர்களாக மா.பிரபாகரன், பா.சசிகரன், செ.செல்வராஜா, தி.பிரசாதனன், சு.விஜிதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (4-60)

# கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை

## இருவர் கைது இருவர் தப்பியோட்டம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம் இடைக்கட்டு பகுதியில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டது. இதன்போது கசிப்பு உற்பத்தியை மேற்கொள்வதற்காக பயன்படுத்திய பரல்கள் மற்றும் அதற்கான உபகரணங்கள் உள்ளடங்கலாக 180 லீற்றர் கோடாவும் 170 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது.

அத்துடன் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர், இருவர் தப்பியோடியுள்ளனர். மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட புதுக்குடியிருப்பு பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4)

# கோப்பாய் இளைஞனின் உயிரிழப்புக்கு காரணம் போதைப் பாவனையே!

## மருத்துவ அறிக்கையில் தகவல்

(அராலி)

நண்பன் வீட்டுக்குச் சென்ற நிலையில் உயிரிழந்தவர் ஊசி மூலம் போதைப்பொருளை ஏற்றியமையால் தான் உயிரிழந்தார் என உடல் கூற்று பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

கோப்பாய் பகுதியை சேர்ந்த குறித்த நபர் திருநெல்வேலி பகுதியில் உள்ள தனது நண்பர் ஒருவரின் வீட்டுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சென்றுள்ளார். அங்கு கதிரையில் அமர்ந்தவர் சிறிது நேரத்தில் மயங்கி சரிந்து உயிரிழந்தார் என பொலிஸ் விசாரணைகளில் போது தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் நேற்று புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட உடல் கூற்று பரிசோதனையின் போது கையில் ஊசி மூலம் போதைப் பொருளை செலுத்தியமையாலேயே உயிரிழப்பு ஏற்பட்டது என கண்டறியப்பட்டுள்ளது.

அதனை அடுத்து கோப்பாய் பொலிஸார் தமது விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். இதேவேளை யாழில் கடந்த மூன்று மாத கால பகுதிக்குள் 7 இற்கும் மேற்பட்டவர்கள் போதைப் பொருளை ஊசி மூலம் செலுத்தியதில் உயிரிழந்துள்ளனர். (4-33-104)

# புலமைப்பகிர்வு நிகழ்வு

(கொழும்பு)

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் துணைக் காப்பாளரான பேராசிரியர் ம.முகம்மது உவைஸின் புலமைப்பகிர்வு நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க இலக்கியக்குழுச் செயலாளர் தெ.மதுசூதனன் தலைமையில் விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"இஸ்லாமிய தமிழ் இலக்கியப்புலத்தில் பேராசிரியர் ம.மு.உவைஸ்" என்னும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்க துணைக்காப்பாளர் கலாநிதி.க.இரகுபரன் "பேராசிரியர் ம.மு.உவைஸின் தமிழ்ப்பணி" என்னும் தலைப்பில் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி அமைப்பின் உதவிப் பொதுச்செயலாளர் எம்.எச்.எம்.ஹஸன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 350 | 380 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 470 | 600 |
| தக்காளி | 400 | 400 | 450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 240 |
| கோவா | 340 | 500 | 450 | 450 |
| கரட் | 300 | 360 | 380 | 400 |
| பூசணி | 160 | 100 | 120 | 120 |
| புடோல் | 100 | 120 | 120 | 200 |
| வாழைக்காய் | 150 | 140 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 260 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 180 | 160 |
| பாகற்காய் | 450 | 400 | 500 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 200 | 200 |
| பயற்றங்காய் | 100 | 200 | 120 | 150 |
| லீக்ஸ் | 300 | 260 | 280 | 200 |
| பீற்றூட் | 160 | 180 | 160 | 200 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 400 | 450 |
| போஞ்சி | 550 | 650 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 380 | 300 | — | 360 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 250 | 250 | 150 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 40-80 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 140 | 250 |
| பொன்னாங்கண்ணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 25 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 80 | 80 | 150 |

# படையினர் வசமுள்ள வீதி விடுவித்துக் கொடுக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(முறிகண்டி)

கிளிநொச்சி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்திற்கு செல்லும் வீதி படையினரிடமிருந்து விடுவித்து கொடுக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பாடசாலை கல்விசார் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு சொந்தமான விளையாட்டு மைதானத்திற்கு செல்லும் வீதியானது, இராணுவ முகாமிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளமையால், மாணவர்கள் ஏ9 வீதி ஊடாக சென்று விளையாட்டுக்களில் ஈடுபடவேண்டிய நிலை காணப்படுவது தொடர்பிலும், அது பாதுகாப்பற்றது என்ற விடயம் தொடர்பிலும் பாடசாலை அதிபர் அமைச்சரிடம் முன்வைத்தார்.

குறித்த விடயம் இலகுவானது எனவும் அதனை மாணவர் பாவனைக்காக விடுவிப்பதற்கான நடவடிக்கையை உடன்மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்த அமைச்சர், அது தொடர்பில் விளக்கமாக எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறும் அவர் தெரிவித்தார். (4-100-318)

# நூல் வெளியீடு

(அக்கராயன்)

கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலய அதிபர் அ.பங்கயற்செல்வனின் நிழல்கள் சொல்லும் கதைகள் நூல் வெளியீடும் கருத்தமர்வும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கிளிநொச்சி காவேரி கலாமன்ற இயக்குநர் வணபிதா யோசுவா அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் நூல் அறிமுக உரையினை எழுத்தாளர் சி.கருணாகரன் நிகழ்த்த உள்ளார்.

நூலினை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி வெளியிட உள்ளார். (4-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## +5 மரணம்...

உயிரிழந்த ஐவரில் நால்வர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் எனவும் ஒருவர் 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்டவர் எனவும் இவர்களில் இரண்டு ஆண்களும் மூன்று பெண்களும் அடங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மேலும் 161 பேருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

அதன்படி, கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 668,497 ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

## பஸிலை சந்திக்கி...

கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாகவும் அறியமுடிகிறது. (ம-7)

## இராணுவ நோக்...

2017 ஆம் ஆண்டு கடனுக்கான மாற்றாக பெய்ஜிங் 99 வருட குத்தகைக்கு எடுத்துக்கொண்ட அம்பாந்தோட்டை துறைமுகத்தில் செவ்வாயன்று வந்த உயர்தொழில்நுட்ப சீன ஆராய்ச்சிக் கப்பலின் வருகைக்கு முன்னதாக இந்தப் பேட்டி வழ்ங்கப்பட்டுள்ளது.

சீனாவின் பெல்ட் அண்ட் ரோட் திட்டத்தின் ஒரு பகுதியாக அம்பாந்தோட்டை துறைமுகம் உருவாக்கப்பட்டது. ஆனால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாததால் 2017 இல் துறைமுகம் சீனாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, இது ஒன்றும் புதிதல்ல. அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளும் துறைமுகங்களை குத்தகைக்கு எடுத்துள்ளதாக இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## கடும் அழுத்தம்...

ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளுக்கு ஏற்பவே அமைந்துள்ளதாக சீனா சுட்டிக்காட்டியுள்ளது.

Yuan Wang 5 கப்பல் நேற்று முன்தினம் காலை அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்ததுடன், தொடர்ந்தும் அங்கு நங்கூரமிட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சு வழங்கிய அனுமதியின் பிரகாரம், 7 நாட்கள் குறித்த கப்பல் துறைமுகத்தில் தங்கியிருக்க முடியும்.

இதேவேளை, சீன இராணுவத்தால் Yuan Wang 5 கப்பலுக்கு கட்டளை பிறப்பிக்கப்படுவதால், அது குறித்து கவனம் செலுத்துவதாக இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கைக்கு தெரிவித்துள்ளதாக இந்திய பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய கடற்படை தற்போது சீன கப்பலின் இருப்பிடம் மற்றும் கூடுதல் செயற்பாடுகளை மிக உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக கடற்படையின் பெயர் குறிப்பிடப்படாத அதிகாரி ஒருவர் கூறியதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இந்தியா செல்ல...

மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இவர்களை மன்னார் நீதவான் முன்னிலையில் இன்று ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ரணில் எவ்வாறு...

தார்.

எவ்வாறாயினும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற முறை தொடர்பில் தாம் கேள்வி எழுப்பவில்லையென தெரிவித்த பிரேமதாஸ, அரசியலமைப்பின் பிரகாரமே இந்த நியமனம் இடம்பெற்றதாக தெரிவித்தார்.

மேலும், ராஜபக்ஷவின் திருடர் கூட்டத்தை பாதுகாப்பதாக யாரும் உறுதியளித்தால், அவர்தான் இன்று நாட்டின் அதிபராக இருப்பார் என்றும் கூறினார். (ம-7)

## லாஃப் எரிவாயு...

மேலும், 5 கிலோ எடை கொண்ட லாஃப் எரிவாயு சிலிண்டரின் விலை 420 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 2,320 ரூபாயாகும்.

இதேவேளை, 2 கிலோகிராம் லாஃப் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 928 ஆக குறைக்கப்பட்டுள்ளதாக லாஃப் எரிவாயு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## இந்திய பெருங்க...

பதிலை வழங்கியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்தியப் பெருங்கடல் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் மற்றொரு முக்கிய புள்ளியாக மாறாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா தனது தேசிய நலன்களை பாதுகாக்க வேண்டும். எனினும் பிராந்தியத்தில் ஏகபோக உரிமை கோர முடியாது என்று வெளியுறவு அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவின் அண்டை நாடுகள் கலாசார ரீதியாக வசதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தடைபட்டுள்ளதாகவும் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் சர்வதேச நாணய நிதியத்தை சமாளிப்பதற்கு இலங்கைக்கு உதவிய ஒரே அண்டை நாடு இந்தியா மட்டுமே என வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். (ம-7)

## அடிமைத்தனத்...

பட்டதாவது,

"பெருந்தோட்டத் துறை, ஆடை உற்பத்தி ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு அப்பாற்பட்டு போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குறிப்பாக வீட்டுப் பணியாளர்களாகவும் பணிப் பெண்களாகவும் பணிபுரியும் வறுமையில் வாடுபவர்கள் வரை பல மட்டங்களில் பரவலாக காணப்படுகின்றது.

12 செப்டம்பர் முதல் ஒக்டோபர் 7 வரையிலான ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஐம்பத்தோராவது கூட்டத் தொடருக்காக, அடிமைத்தனத்தின் சமகால வடிவங்கள், அதன் காரணங்கள் மற்றும் விளைவுகள் உள்ளிட்ட விடயங்களுக்கான விசேட அறிக்கையாளர் டொமோயா ஒபோகாட்டா, அளித்த அறிக்கையில், "சிறுவர் தொழிலாளர் முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சட்ட மற்றும் பிற நடவடிக்கைகள்எடுக்கப்பட்ட போதிலும், அதன் மோசமான வடிவங்கள் உட்பட, அது இன்னும் இலங்கையில் நீடிக்கிறது" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## மில்...

கள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கையர்கள் உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் பிற இன்னல்களை எதிர்கொள்கிறார்கள். ஆனாலும் புதிய அரசாங்கம் அமைதியான எதிர்ப்பாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களை ஒடுக்குவதில் கவனம் செலுத்துகிறது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சிகங்குலி குற்றம் சுமத்தியுள்ளார்.

இதனை விடுத்து இலங்கையின் பாரிய பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு அரசாங்கம் பொது மக்கள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜூலை மாதம், மனித உரிமைகள் கண்காணிப்பகம் கொழும்பில் சிலரை நேர்காணல் செய்தது.

அவர்கள் 50 சதவீதத்திற்கும் அதிகமான பணவீக்கத்துடன் மற்றும் சில சமயங்களில் பெற முடியாத சில தேவைகளுடன் குறைந்து வரும் வருமானம் காரணமாகப் போராடிக் கொண்டிருப்பதாக கூறினர்.

சிலர், தாங்கள் இரண்டு வேளை உணவை மட்டும் குறைத்துவிட்டதாகவும் மின்சாரக் கட்டணம், வாடகை போன்ற அடிப்படைச் செலவுகளைச் சமாளிக்க கடன் வாங்குவதாகவும் தெரிவித்தனர்.

மாதம் 45,000 ரூபாய் சம்பாதிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரி தனது குடும்பம் கடனில் மூழ்கி இருப்பதாக கூறினார்.

6 மாத குழந்தையுடன் தெரு துப்புரவு பணியாளர் ஒருவர் ஆட்சி மாற்றம் மற்றும் ஊழலுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக போராட்டக்காரர்களுடன் இணைந்து கொண்டதாக கூறினார்.

குழந்தை பிறந்தபோது ஒரு சவர்க்காரம் 80 ரூபாய். இப்போது அது 210 ஆக உயர்ந்துள்ளதாக அந்த பணியாளர் குறிப்பிட்டதாக கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2022/08/17
சீட்டிழுப்பு இலக்கம் 4850
ஆங்கில எழுத்து B வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 8 6 8 4 3
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.08.17
சீட்டிழுப்பு இலக்கம் 159
மகரம் 20 24 41 53 மகரம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 17/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1198
W 23 வெற்றி இலக்கங்கள் 05 20 21 61

கொவிசெத
திகதி 2022.08.17 சீட்டிழுப்பு இலக்கம் 3092
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 06 16 32 35
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.08.17
சீட்டிழுப்பு இலக்கம் - 880
R 15 25 36 63
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 17/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1309
வெற்றி இலக்கங்கள் கும்பம் 6 7 3 2 1 0
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1651
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.08.17
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,949,100/-
வெற்றி இலக்கங்கள் 01 22 26 51 ஆங்கில எழுத்து Z
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.17
சீட்டிழுப்பு இல : 3986
வர்ணம் : ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,868,940/-
வெற்றி இலக்கங்கள் 02 11 23 51 ஆங்கில எழுத்து Q
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 3,041,388.60
திகதி 2022-08-17
வெற்றி வாரம் 3537
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 24 27 51 56 மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,853,128.60

வாசனா 25
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 11 03 28 48 59
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1001
வர்ணம் பச்சை
திகதி 2022.08.17 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 254,231,305/-
தொலை பேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1845
சீட்டிழுப்பு திகதி 2022-08-17
வெற்றி இலக்கங்கள் 02 09 19 58 ஆங்கில எழுத்து E
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 34,711,436/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1825
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022.08.17
தினம் புதன்கிழமை
C 20 43 44 65
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,295,720/-


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரச நிறுவனங்கள் தனியார் மயமாகவுள்ளன

## ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குவது தொடர்பில் அரசாங்கம் பரிசீலித்து வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் வழங்கிய நேர்காணலில் ஜனாதிப்தி, தேசிய விமான சேவையான ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ், ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ்மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் ஆகியவை தனியார் மயமாக்கப்படலாம் என்று கூறினார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயமாக்குவது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை புதிய முதலீடுகளைத் திறக்கும் என்று கூறிய அவர், எவ்வாறாயினும், சில சலுகை கள் 40ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் இருப்ப தால், அனைத்து சலுகைகளை வைத்திருப்பவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்றார். (ம-7)

# நாட்டின் மக்கள் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாகியுள்ளனர்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாகியுள்ளது இந்நாட்டின் இருநூற்று இருபது இலட்சம் மக்களே என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவர்களை பழிவாங்கும் நடவடிக்கையில் இருந்து காப்பாற்றுவதையே அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர், "அரசியல் பழிவாங்கலுக்கு ஆளான அரச அதிகாரிகள் குழுவொன்றிற்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான அமைச்சரவை பத்திரமொன்று பிரதமர் அலுவலகத்தின் ஊடாக முன்வைக்கும் நடவடிக்கையில் மொட்டுக் கட்சி துரிதமாக ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்தருணத்தில் அவ்வாறானதோர் செயலை மேற்கொள்ள ஒருபோதும் இடமளிக்க மாட்டேன்.

தன்னிச்சையான முடிவினால் உரங்களுக்கு தடை விதிக்கப்பட்டதால் விவசாயிகளின் பயிர்கள் சேதமடைந்துள்ளதோடு, இன்றும் அவர்களுக்கான நட்டஈடு வழங்கப்படவில்லை.

இரண்டு வருடங்களுக்கும் மேலாக இந்நாட்டின் பிள்ளைகள் முறையான கல்வியை பெறவில்லை எனவும் தெரிவித்தார்.

வங்குரோத்து நிலையிலுள்ள நாட்டை மேம்படுத்துவதை விட்டுவிட்டு, இது போன்ற அரசியல் பழிவாங்கல்கள் என்ற போர்வையில் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு சலுகைகள் வழங்கப்படுவதை நான் எதிர்க்கிறேன்" எனக் குறிப்பிட்டார். (ம-7)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில்

# பெருந்தொகையான தங்க பிஸ்கட் மீட்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து 205 மில்லியன் ரூபாய் பெறுமதியான 9 கிலோ 500 கிராம் எடையுள்ள தங்க பிஸ்கட்டுகளுடன் வெளியேற முயன்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமானப் பயணி மற்றும் விமான நிலையத்தின் சுங்க வரியற்ற வர்த்தக வளாகத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவரை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் குழு நேற்று கைது செய்துள்ளது.

நிட்டம்புவ பிரதேசத்தில் வசிக்கும் 39 வயதுடைய ஆண் பயணி ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்றுக் காலை 8.35 மணியளவில் எமிரேட்ஸ் எயார்லைன்ஸிற்கு சொந்தமான EK - 650 விமானம் மூலம் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

மேலும், கைது செய்யப்பட்ட மற்றைய நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் சீதுவையைச் சேர்ந்த 38 வயதுடைய பெண் என தெரியவந்துள்ளது. (ம-7)

# ஐ.நாவின் சாசனத்தின் படியே புலம்பெயர் அமைப்புகளின் தடை நீக்கப்பட்டது

## ஜனாதிபதி அலுவலகம் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் பயங்கரவாத தடுப்பு சாசனத்தின்படியே இலங்கையில் புலம்பெயர்ந்த 6 அமைப்புகளின் தடை நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி அலுவலகம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் தீர்மானங்கள் 1758/19 இன் படி, பாதுகாப்பு அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சருக்கு இடையில் ஏற்பட்ட உடன்பாட்டின்கீழ், அமைப்புக்கள் மீதான தடைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தகுதி வாய்ந்த அதிகாரியாக பாதுகாப்பு செயலாளர் நியமிக்கப்பட்டார்.

இதனையடுத்து, அவர் வெளியுறவு அமைச்சகம், சட்டமா அதிபர் திணைக்களம், புலனாய்வு பிரிவுகள், சட்ட நடைமுறை நிறுவனங்கள் மற்றும் மத்திய வங்கியின் நிதி விசாரணை பிரிவு ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு குழுவை நியமித்திருந்தார்.

இந்த குழுவினர் பலஆண்டுகளாக புலம்பெயர் அமைப்புக்கள், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தமையை கண்டறிந்து அவற்றைத்தடைசெய்வதற்கான பரிந்துரைகளை வழங்கினர்.

அத்துடன் ஆறு நிறுவனங்கள் மீதான தடைகளை நீக்குவது தொடர்பான கண்காணிப்பையும் அவர்கள் இந்த ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பித்ததாக ஜனாதிபதி அலுவலகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படியே உலகத் தமிழர் பேரவை, அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை, உலகளாவிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, தமிழீழ மக்கள் பேரவை, பிரித்தானியத் தமிழர் கூட்டமைப்பு மற்றும் கனேடியத் தமிழர் காங்கிரஸ் ஆகியவற்றின் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம-7)

# தாய்லாந்தில் 17 இடங்களில் குண்டு வெடிப்பு; 15 பேர் பலி

(பாங்கொக்)

தாய்லாந்தின் தென் பகுதியில் உள்ள பல இடங்களில் நேற்று அடுத்தடுத்து குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

தாய்லாந்தின் தென் பகுதியில் பட்டணி, நாராதிவத், யால ஆகிய நகரங்களில் உள்ள 17 இடங்களில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்புகள் மற்றும் தீவைப்புச் சம்பவங்களில் மூன்று பேர் காயமடைந்துள்ளதுடன் 15 பேர் உயிரிழந்துள்ளனர். (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12475)

076 825 7716 (ஆகாஸ்)

காணி விற்பனை

யாழ்ப்பாணம் மாம்பழம் சந்திக்கு அருகாமையில் 2 பரப்பு மற்றும் 1 பரப்பு 6 குளி காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
A9 பிரதான வீதியில் இருந்து 150M தூரத்தில் உள்ளது.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.




(12471)

தொடர்புகளுக்கு

076 065 0166, 074 308 2364

காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இருந்து 200m இல் அதே பிரதான வீதியில் 3 பரப்பு சதுரக் காணி விற்பனைக்கு உண்டு. (12470)

076 105 6343
077 261 4549

காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி சந்தியில் 27 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

076 490 5403, 076 491 2493, 076 490 6029 (12466)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org